# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 56/2023

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாள் வியாழக்கிழமை PW3-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW4 Examined as PW4

| | | |
|---|---|---|
| Date | : | 21.12.2023 |
| Name | : | பெத்தபெருமாள் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1 ,3 to A6 present. A7 absent. 317 petition filed and allowed.

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் நல்லாகுடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1,2 தெரியும் எங்கள் ஊர்தான். 17.02.2018 மாலை 4.00 மணியளவில் ஜான்பீட்டர் எனக்கு போன் செய்தார். ரவி எனபவர் தன்னுடைய அண்ணன் ஜான்சனை அடித்து செல்வதாகவும் என்னை வந்து கேட்குமாறு சொன்னார். நான் நல்லாடையில் வந்து அங்கு இருக்கிறார்களா என்று தேடினேன். உறவுக்காரர் பையன் ஒருவனை பெரம்பூர் காவல்நிலயம் போய் பார்க்கசொன்னேன் நான்அருபாக்கம் அருகே சென்றபோது அந்த பையன் அங்கு இல்லை என்று சொன்னான் நான் திரும்பி விட்டேன் அதன்பிறகு நல்லாடையில்அவர்கள் வீட்டிற்கு சென்றேன். அவர்கள் வீட்டில்இல்லை என்று சொல்லிவிட்டார்கள்

பேசிக்கொண்டே இருக்கும்போது அவர்களை வாய்க்கால் அருகில்அழைத்து வருவதாக ஒரு பையன் சொன்னான். வண்டியில் கண்ணன் என்பவர் ஜான்சனை அழைத்து வந்தார். நான்வண்டியை நிறுத்தி எங்கே அழைத்து செல்கிறீர்கள் என்று கேட்டேன் நான்பெரம்பூர்காவல்நிலையம் அழைத்து சென்றார்கள். அதன் பிறகு ஜான்சன் என்னை அழைத்துச் செல்லுமாறு நான் கண்ணனிடம் கேட்டேன. முதலில் வாக்குவாதம் செய்தார்அதன் பிறகு என்னை நம்பி அனுப்பி நான் பெரம்பூர் காவல்நிலையம் அழைத்துச்செல்கிறேன் என்றேன் என்னுடன் அனுப்பிவைத்தார் பெரம்பூர்காவல் நிலையத்தில் தகவல் சொன்னவுடன் மருத்துவமனை அழைத்துச் சென்றேன். அதன்பிறகு ஒரு காரை ஏற்பாடு செய்து அவர்கள் உறவினர்களுடன் மருத்துவமனை அனுப்பி வைத்தேன். மறுநாள்மயிலாடுதுறையில் இருந்து அன்பு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டோம்என்று சொன்னார்கள். பேலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**